1994 மே 2] [திரு. எஸ். கண்ணப்பன்]

நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும் சேர்ந்து இதற்கு முடிவு எடுக்கவேண்டும் என்று அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, நான் தெரிவித்ததைப் போல, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, விரைவிலே இது சம்பந்தமாக முடிவு எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) மண்டல் குழு பரிந்துரைகளின்படி கள்ளர், மறவர், அகமுடையர் இனத்தவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்காதது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. எஸ். ஆண்டித் தேவர்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு பரிந்துரைகளின்படி, கள்ளர், மறவர் அகமுடையர் இனத்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதது குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

தமிழ்நாட்டில் அகமுடையர் வகுப்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், கள்ளர் மற்றும் ஈசநாட்டு கள்ளர் வகுப்புகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாகவும், கந்தர் கோட்டை கள்ளர் வகுப்பு தஞ்சாவூர், நாகை-காயிதேமில்லத் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தபட்ட வகுப்பாகவும், கூட்டப்பால் கள்ளர் வகுப்பு திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப் பட்ட வகுப்பாகவும், பிரமலைக்கள்ளர் வகுப்பு பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை தஞ்சாவூர் மற்றும் நாகை—காயிதேமில்லத் மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட

வகுப்பினராகவும், பெரியசூரியர் கள்ளர் வகுப்பு திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. மறவர் வகுப்பு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர் திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், அப்பநாடு கொண்டயம்கோட்டை மறவர் வகுப்பு பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர், இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், செம்பநாடு மறவர் வகுப்பு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சீர்மரபினராகவும் இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மண்டல் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் மைய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அறிவிக்கப்பட்ட 27 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் பயன் பெறுவதற்குத் தகுதி வாய்ந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் ஒன்றினை மைய அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இப்பட்டியல், முதற்கட்டமாக, மண்டல் குழு அறிக்கையில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் மற்றும் மாநிலத்தில் நடைமுறையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் ஆகிய இரண்டிலும் பொதுவாக உள்ள வகுப்புகளைக் கொண்டுள்ளது. மைய அரசு வெளியிட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அகமுடையர், கள்ளர் (ஈச நாட்டு கள்ளர், கந்தர்வகோட்டை கள்ளர், கூட்டப்பால் கள்ளர், பிரமலைக் கள்ளர் உட்பட) மற்றும் மறவர் (கருமறவர், அப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் மற்றும் செம்பநாடு மறவர் உட்பட) வகுப்புகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. இதில் எவ்வகுப்பும் மைய அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபடவில்லை. மைய அரசு வெளியிட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இவ்வகுப்புகள் சிலவற்றின் பெயர்களில் எழுத்துப் பிழைகள் உள்ளன. எழுத்துப் பிழைகள் மைய அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டு அவற்றை சரி செய்து திருத்தம் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சீர்மரபினர் பட்டியலில் மொத்தம் 68 வகுப்புகள் இடம் பெற்றுள்ளன. அவ்வகுப்புகளில் 66 வகுப்புகள் மைய அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட இரு சீர்மரபினர் வகுப்புகள் மட்டுமே

1994 மே 2] [திரு டி. ஜெயகுமார்]

மைய அரசின் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்டுள்ளன:-

(1) பட்டு துர்காஸ் (Battu Turkas)

(2) தேவகுடி தலையாரிகள் (Devagudi Talayaris)

மேற்குறிப்பிட்ட இரு வகுப்புகளையும் மைய அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து ஆணை பிறப்பிக்குமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் விசாரணை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் சமயத்தில் அரசின் சார்பில் இது குறித்து முறையீடு செய்து அவ்வகுப்புகள் சேர்த்துக்கொள்ளப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கிற விவர அறிக்கையில், தமிழகத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இனத்தவர்களுக்கு 69 சதவீதம் வேண்டும் என்று தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்களும், இந்தச் சட்ட மன்றமும் நிறைவேற்றிய தீர்மானத்திலே, சீர்மரபினர் என்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் முறையே கள்ளர், மறவர், அகமுடையர் ஆகியோர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அது ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்த மண்டல் கமிஷன் பரிந்துரையிலே முக்குலத்தோர், கள்ளர், மறவர், அகமுடையர் ஆகியவர்களின் பெயர்கள் அந்தப் பெயர்பட்டியலிலே இல்லை என்பதை நான் பார்த்தேன். இது பொதுமக்கள் மத்தியிலே பரவலாக இந்த இனத்தைச் சேர்க்கவில்லையே, தமிழக அரசு சமூக நீதிக்காகப் பாடுபடுகின்ற முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே மத்தியில், இந்த 3 இனத்தவர்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே விடுபடுமானால், மத்தியிலே சமூக நீதி பாதிக்கப்படுகிறது என்கிற அளவிற்கு, பொதுமக்கள் சந்தேகப்படுகின்ற அளவிற்கு, எங்களை எல்லாம் ஏன் இதை நீங்கள் கேட்கவில்லை என்று கேட்கின்ற நேரத்தில்தான் இதை நான் கிளப்பினேன். மண்டல் பரிந்துரையிலே சொல்லுகின்றபோது Devar, Thevar என்ற பெயர்தான் இருந்தது. அப்படி தமிழகத்திலே Devar, Thevar என்ற தனி ஜாதி இல்லை. கள்ளர், மறவர், அகமுடையர் என்ற மூன்று இனத்தவர்களும் தேவர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த இனம் அந்தப் பட்டியலிலே இல்லை என்று சொன்னபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பரிந்துரையோடு

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1994 மே 2

மத்திய அரசுக்கு எழுதி, இந்த மூன்று இனத்தவர்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியினை இந்த மூன்று இனத்தவர்களின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் தமிழக சட்டமன்ற மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்த சமூக நீதிக்கான 69 சதவீதம் நிறைவேற்றப்படுகின்றபோது காயிதே மில்லத் மாவட்டத்திலே இருக்கின்ற கள்ளர்கள், புதுக்கோட்டையிலே இருக்கின்ற கள்ளர்கள், திருச்சியிலே இருக்கின்ற கள்ளர்கள், சீர் மரபினர் என்றும், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காமராஜர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்....(குறுக்கீடு)

*பிற்பகல் 12—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்:** அங்கேயிருக்கிறவர்கள் எல்லாம் மிகவும் பிற்பட்டவர்கள் என்றும், அகமுடையர்களை பிற்பட்டவர்கள் என்றும், இங்கே அறிவித்திருக்கிறோம். இங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்பவர்களை மத்தியிலே இருக்கின்ற அந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27 சதவீதத்திலே ஏதாவது தனியாக ஒதுக்கீடு செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு அறிக்கையில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் மற்றும் மாநில அரசின் நடைமுறையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் ஆகிய இரண்டும் பொதுவாக உள்ள வகுப்பினரைக் கொண்டது. மைய அரசு வெளியிட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அகமுடையர், கள்ளர், மற்றும் மறவர் வகுப்புகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. இதில் எவ்வகுப்பும் மைய அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபடவில்லை. மைய அரசு வெளியிட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வகுப்புகள் சிலவற்றின் பெயர்களில் எழுத்துப்பிழைகள் உள்ளன. எழுத்துப் பிழைகளை மைய அரசுக்குச் சுட்டிக்காட்டி அவற்றைச் சரி செய்து, திருத்தம் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சீர் மரபினர் பட்டியலில் மொத்தம் 68 வகுப்புகள் இடம் பெற்றுள்ளன. அவ்வகுப்புகளில் 66 வகுப்புகள் மைய அரசின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட 2

1994 மே 2] [திரு. டி. ஜெயகுமார்]

சீர் மரபினர் வகுப்புகள் மட்டுமே மைய அரசின் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்டுள்ளன. பட்டுதுர்காஸ், தேவக்குடி தலையாரிகள். மேற்குறிப்பிட்ட இரண்டு வகுப்புகளையும் மைய அரசினுடைய பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து ஆணை பிறப்பிக்குமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே எந்த ஒரு சிறு தவறு அல்லது பிழை இருந்தாலும்கூட உடனடியாக விரைந்து செயல்படுகின்ற நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவியினுடைய அரசு மைய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்து, நம்முடைய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினரைச் சேர்த்து, அனைத்து மக்களையும் பாதுகாக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதிலுக்கு நன்றி. நான் கேட்பது 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுவது போல், இந்த 27 சதவீதத்திலே தமிழகத்திலே பிரிக்கப்பட்டிருப்பது போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினருக்குத் தனியாக ஏதாவது சதவீதத்தை ஒதுக்குவதற்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறதா அல்லது பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படிதான் மண்டல் கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே இட ஒதுக்கீடு வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றது. எனவே, இது கொள்கை முடிவாக இருக்கின்ற காரணத்தால் இது சம்பந்தமாக உடனடியாக பதில் சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறோம்.

## 6. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.